**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. CC.77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தீபன் | Prosecution | P.W-12, L.W-8 |
| Father Name | இளங்கோவன் | Defence | |
| Village | குளங்கரை, திட்டை | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 33/2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து டூவீலர் வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மைத்துனர் ஆவார். தயாநிதி மகன் அபினேஷ் எனக்கு தெரியும். கடந்த 26.01.2025 அன்று நான் வீட்டில் இருந்த போது சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் குளங்கரை காலணி தெருவிற்கு வந்து எதிரி திருமணம் செய்து ஏமாற்றியது பற்றி படம் வரைந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் முதலாவது கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர் என்றால் சரிதான். 26.01.2025 அன்று 1.00 மணிக்கு நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் நான் வீட்டில் இருந்தேன். சிவசந்திரன் புகார் கொடுத்த போது 03.00 மணிக்கு நான் காவல் நிலையத்தில் இருந்தேன். போலீசார் என்னிடம் பகல் 11.00 கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னிடம் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் போலீசார் விசாரணை செய்தற்காக நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

**எதிரி காணொலி மூலமாக ஆஜர் செய்யப்பட்டார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.**
**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. CC.77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அபினேஷ் | Prosecution | P.W-13, L.W-9 |
| Father Name | தயாநிதி | Defence | |
| Village | மணலகரம் | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 28/2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து மைக்ரோ பைன்னாஸ்ல் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு தெரியும். அ.சா.12யை எனக்கு தெரியும். என் நண்பர் ஆவார். இளங்கோவன் மகன் தீபன் எனக்கு தெரியும். கடந்த 26.01.2025 அன்று தீபன் வீட்டில் இருந்த போது சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் குளங்கரை காலனி தெருவிற்கு வந்து எதிரி திருமணம் செய்து ஏமாற்றியது பற்றி படம் வரைந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் என் நண்பர் என்றால் சரிதான். இந்த வழக்கில் போலீசார் 26.01.2025 அன்று மதியம் 03.00 அளவில் விசாரித்தார்கள். அப்போது நானும் தீபன் என்பவரும் இருந்தோம். அதன் பின்னிட்டு நான் காவல் நிலையம் செல்லவில்லை. புகார்தாரர் என் நணபர் என்பதால் நான் அவருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி காணொலி மூலமாக ஆஜர் செய்யப்பட்டார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**